## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ULUNDURPET

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII , Code of Criminal Procedure)

**C.C. 139/2024 Date : 23.06.2025. P.W.1 / LW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.குமார் | ஆதார் எண் | |
| தந்தை பெயர்; | சிங்காரவேல் | தொழில் | விவசாய வேலை |
| கிராமம் | பரிந்தல் | வயது | 53 |
| 1, 2 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர். | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873.

**முதல்விசாரணை..**

நான் பரிந்தல் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது வீடு பரிந்தல் கிராமத்தில் பெருமாள் கோவில் வீதியில் உள்ளது, நான் எனது வீட்டை 1959 ல் வீடு கட்டினேன். எனது வீட்டிற்கு பக்கத்து இடத்தை எதிரிகள் வாங்கினார்கள். 3.5.2022 ம் தேதி மதியம் 1 மணி இருக்கும், எதிரிகள் ஜேசிபி வைத்து என் சுவற்றை ஒட்டி கடக்கால் எடுத்தார்கள். எனக்கு இரண்டு அடி இடம் உள்ளது. நான் கடக்கால் எடுப்பதை மறித்தேன். அதற்கு எதிரி கோவிந்தராஜ் என்பவர் தேவிடியா பையா உனக்கு இடம் இல்லை, உனக்கு எங்கடா இடம் என்று சொல்லி செண்ட்ரிங் கம்பியால் என் இடது தோள்பட்டையிலும், இடது கால் தொடையிலும் அடித்தார். 2ம் எதிரி என்னை காலால் எட்டி உதைத்து செப்டிங்க டேங்க்கிற்காக பறிக்கப்பட்ட குழிக்குள் தள்ளிவிட்டார். ஐய்யாதுரை மற்றும் இரண்டு நபர்கள் இருந்தார்கள். இடமே உனக்கு இல்லை, இந்த இடத்திற்கு வந்தால் உன்னை கொலை செய்துவிடுவோம் என கொலை மிரட்டல் செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ.1 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. என்னுடைய வீடானது நானும், எனது தகப்பனார் சிங்காரவேல் என்பவரும் பிறப்பதற்கும் முன்னால் கட்டப்பட்டதா என்றால் நான் பிறக்கவில்லை, என் தந்தை பிறந்துவிட்டார். என்னுடைய வீட்டின் நீள அகலம் தெரியாது, பத்திரத்தில் உள்ளது. என் வீட்டை சுற்றியுள்ள நான்கு திசைகளிலும் எவ்வளவு இடம் எங்களுக்கு சொந்தமாக உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் தெற்கில் 3 அடியும்,

வடக்கால் 2 அடியும்,



கிழக்கில் 3 அடியும், மேற்கால் 1-1/2 அடியும் உள்ளது.

2. எனது வீட்டிற்கு வடக்கு திசையில் எதிரிகளுக்கு சொந்தமான வீடு உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரி அவரது வீட்டிற்கு எதிரில் உள்ள இடத்தில் செப்டிங் டேங்க் கட்டுவதற்காக பள்ளம் பறித்தபோது தான் நான் கேட்டதால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். என் வீட்டிற்கு கிழக்கில் உள்ள காலி இடத்தில் பள்ளம் பறிக்கவில்லை என்றால் இல்லை.

3. 1ம் எதிரி கோவிந்தராஜ் 2022 ல் வீடு கட்டினார். 2018 ல் 1ம் எதிரி அவரது இடத்தை அளக்க சர்வேயருக்கு படி கட்டி இடத்தை அளந்தாரா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. 2021 ல் வீடு கட்டுவதற்கு முன்பாக சர்வேயருக்கு படி கட்டி 1ம் எதிரி அவரது இடத்தை அளந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், 2018 மற்றும் 2021 ஆண்டில் 1ம் எதிரி சர்வேயருக்கு படி கட்டி இடத்தை அளந்தார் என்றும், அது எனக்கு தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. 1ம் எதிரி ஜேசிபி கொண்டு பள்ளம் தோண்டினார். வண்டியின் எண் தெரியாது, அந்த வண்டி புத்தமங்கலத்தை சேர்ந்த வண்டி ஆகும். பள்ளம் தோண்டி முடிந்தபின்னர் தான் நான் சம்பவ இடம் சென்றேன். நான் சம்பவ இடம் சென்றபோது, 1,2 எதிரிகளும், நானும் இருந்தோம். நான் நேராக எதிரிகளை பார்த்து இந்த இடத்தில் ஏன் பள்ளம் தோண்டுகிறீர்கள் என்று கேட்டு சத்தம் போட்டேன்.

5. சம்பவத்திற்கு முன்பு 1ம் எதிரி சாலை விபத்தில் அடிப்பட்டு நடக்க முடியாத சூழ்நிலையில் இருந்தார் என்றால் இல்லை, சம்பவத்திற்கு பின்னிட்டு தான் 1ம் எதிரிக்கு விபத்து ஏற்பட்டது. என்னை எதிரிகள் அடிக்கும்போது சத்தம் கேட்டு பக்கத்தில் இருந்தவர்கள் வந்தார்கள். சம்பவம் நடந்தவுடன் நான் நேரடியாக மருத்துவமனைக்கு சென்றேன். அப்போது நேரம் மாலை 4 முதல் 5 மணி இருக்கும்.

6. போலீசார் மருத்துவமனைக்கு வந்து விசாரித்து சம்பவத்திற்கு அடுத்த நாள் வாக்குமூலம் பெற்றார்கள். அப்போது போலீசார் நடந்த சம்பவம் குறித்து என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று என்னிடம் கையொப்பம் பெற்று சென்றார்கள். மறுநாள் நான் காவல்நிலையம் சென்று சம்பவம் குறித்து புகார் கொடுத்தேன். மருத்துவமனையில் விசாரித்தபின்பு இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால்

சரிதான்.

7. நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொண்ட விவரத்தினை எனது



புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். எனக்கு தோள்பட்டையிலும், இடது தொடையிலும் அடிப்பட்ட விவரத்தினை மருத்துவரிடம் குறிப்பிட்டு சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். என்னை 1வது எதிரி, செண்ட்ரிங் கம்பியால் தோள்பட்டையிலும், இடது தொடையிலும் அடித்த விவரத்தினை எனது புகாரிலும், போலீசார் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

8. நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றும், 1ம் எதிரி அவருக்கு சொந்தமான இடத்தில் கடக்கால் பறித்தார் என்றும், நான் அந்த இடத்தை அபகறிப்பதற்காக அதை தடுத்தபோது பள்ளத்தில் விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது என்றாலும், எதிரிகள் மீதுளள விரோதத்தால் அவர்கள் தாக்கியதாக பொய்ப்புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழககிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

Taken down by me certified that this contains a true and correct statement made by the accused/witness read over and admitted by him/her to be correct.

Judicial Magistrate-I,
Ulundurpet.

typed by r.rasathilagam